செ.வெ.எண்: 56 நாள்:20.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் பயனாளிகளுக்கு ரூ.80.22 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் வருவாய் துறையின் சார்பில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (20.08.2016) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருவாய் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இலுப்பூர் வட்டத்தை சேர்ந்த பயனாளிகளுக்கு வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.



இதில் 56 பயனாளிகளுக்கு ரூ.672000 மதிப்பில் மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகைக்கான காசோலைகளும், 291 பயனாளிகளுக்கு ரூ.3492000 மதிப்பில் முதியோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 5 பயனாளிகளுக்கு ரூ.60000 மதிப்பில் முதிர்கன்னி உதவித்தொகைக்கான காசோலைகளும், 72 பயனாளிகளுக்கு ரூ.864000 மதிப்பில் விதவை உதவித்தொகைக்கான காசோலைகளும்,6 பயனாளிகளுக்கு ரூ.72000 மதிப்பில் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 31 பயனாளிகளுக்கு ரூ.390000 மதிப்பில் நலிந்தோர் நலத்திட்ட உதவித்தொகைக்கான காசோலைகளும், 206 பயனாளிகளுக்கு ரூ.2472000 மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளும் என மொத்தம் 667 பயனாளிகளுக்கு ரூ.8022000 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த 667 பயனாளிகளில் முடிவுற்ற 2016 சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்றவுடன் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் பொதுமக்களுக்கு நன்றி அறிவிப்பு செய்த பொழுது அவர்களிடமிருந்து பெறப்பட்ட 465 மனுக்களில் 307 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6வது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் பொதுமக்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் இலவச மின்சாரம், கூட்டுறவு கடன்கள் ரத்து, டாஸ்மாக் நேரம் குறைப்பு, தாலிக்கு 8 கிராம் தங்கம், கட்டணமில்லாமல் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்தை 200 யூனிட்களாகவும், விசைத்தறிக்கு 750 யூனிட்களாகவும் உயர்த்தி வழங்குதல் போன்ற 5 திட்டங்களுக்கு உடனடி கையொப்பமிட்டு நிறைவேற்றியுள்ளார்கள்.

மேலும் விராலிமலை சட்டமன்ற தொகுதியிலுள்ள பொதுமக்களின் குடிநீர் தேவையை முழுவதுமாக பூர்த்தி செய்யும் வகையில் ரூ.310 கோடி மதிப்பீட்டில் காவேரி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் அறிவிக்கப்பட்டு தற்பொழுது முடிக்கப்பட்டு நீர் சோதனை ஓட்டம் நடைபெற்று வருவதுடன், விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. பொதுமக்கள் வழங்கிய பல்வேறு கோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இப்பகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பொதுமக்கள் இதனை உரிய முறையில் பெற்று பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

..2..

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் இலுப்பூர் பேரூராட்சி கோட்டைத்தெருவில் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டத்தின் கீழ் ரூ.56 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயக்கூடம் கட்டுமானப்பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திருமதி.மீராபரமேஸ்வரி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) திரு.கருப்பண்ணன், பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு, ஆத்மா குழுத்தலைவர்கள் திரு.சாம்பசிவம், திரு.பால்ராஜ், ஊராட்சி மன்றத்தலைவர் திரு.ராமசாமி, வட்டாட்சியர் திரு.தமிழ்மணி, பேரூராட்சி செயல் அலுவலர் திரு.சுலைமான்சேட், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**